DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC.171/2019 |
| Deposition of Witness | { PW.15 |
| | { Prosecution |
| | { |

| | |
|---|---|
| Name | : தங்கராஜ் |
| Father's Name | : --- |
| Taluk | :--- |
| Calling | :--- |
| Religion | :--- |
| Age | :--- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2025.

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.15 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

8, 18, 22 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் வெள்ளாளபுரம் கிராமம், முனியம்பட்டியில் வசிக்கிறேன். நான் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். நான் 28.11.2011 ல் கச்சுப்பள்ளி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது நில அபகரிப்பு குற்றப்பிரிவு

போலீசார் வந்து என்னை எனது அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள். அவர்கள் கேட்டு கொண்டதற்காக சர்வே எண்.360/1 ல் உள்ள நிலத்தை புலத்தணிக்கையும் செய்தேன். மேற்படி சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரணம் 4.58 ஏக்கர். கிராம கணக்குகளின் படி அந்த நிலம் பச்சமுத்து மகன் பரமசிவம், பட்டக்காரர் (எ) கணபதி மகன் பச்சமுத்து, வைத்தி, செம்மலை மகன் அருணாசலம் ஆகியோர்கள் பெயரில் சிட்டா இருந்தது. அதற்கு முன்பு சடையன் (எ) பெரியண்ணன், சடையன் த/பெ.முருகேசன் ஆகியோர்கள் பெயரில் இருந்தது. இதே நிலத்திற்கு பட்டா பெயர் மாறுதல் கேட்டு பலர் விண்ணப்பம் செய்திருந்தார்கள். முரளி, மோகனா, நர்மதா ஆகியோர்கள் பெயரும் அடங்கல் கணக்கில் இருந்தது. இந்த விவரங்களை நான் காவல் ஆய்வாளரிடம் சொன்னேன். நான் வழங்கிய சிட்டா, பட்டா மற்றும் அடங்கல் ஆகியவற்றின் சான்றிட்ட நகல்கள் அ.சா.ஆ.11(வரிசை). ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பிருந்து அதே கிராமத்தில் பணிபுரிந்து வந்தேன். என்னுடைய அலுவலகம், வீடு ஆகியவை அதே கிராமத்தில் உள்ளதா என்றால் அலுவலகம் மட்டும் உள்ளது. வீடு 5 கி.மீ தொலைவிலுள்ளது. 28.11.2011 ல் ஆய்வாளருடன் வேறு காவலர்களும் என் அலுவலகம் வந்திருந்தார்கள். போலீசார் என்னை அழைத்து சென்று தான் சர்வே எண்.360/1 நிலத்தை அடையாளம் கண்டு கொண்டார்கள் என்றால் சரிதான். நான் பி.எஸ்.சி படித்து முடித்துள்ளேன். நான் பணிபுரியும் கிராமத்தில் அசாம்பாவிதம் அல்லது சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டால் நான் உடனடியாக காவல் நிலையத்திற்கு தெரிவிப்பேன்.

(3 ம் எதிரியை தவிர மற்ற எதிரிகள் 1 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை தங்களுக்காக ஏற்றுக்கொள்கிறார்கள். 3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. )

Sd/-தங்கராஜ்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.